செ.வெ.எண்.63 நாள்:26.08.2020

# நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.2.38 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.2.38 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகள் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் (25.08.2020) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட கனாகம்பை முதல் மதுரைவீரன் காலனி வரை ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி திட்டத்தின் கீழ் ரூ.43.97 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சிமெண்ட் சாலை பணியினையும், தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாடு திட்டத்தின் கீழ் கப்பச்சி முதல் மதுரைவீரன் காலனி வரை ரூ.89.40 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் பாலம் அமைக்கும் பணியினையும், தீனட்டியில் RCIDS திட்டத்தின் கீழ் ரூ.22.95 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டிட பணியினையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் மன்றகுறிச்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் செக்டேம் அமைக்கும் பணியினையும், மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.10.50 இலட்சம் மதிப்பில் தீனட்டி - மசக்கல் முதல் மன்றகுறிச்சி வரை முடிக்கப்பட்ட சாலை பணியினையும், கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட ஊரளரண்ணி முதல் பிக்கமரா வரை ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி திட்டத்தின்கீழ் ரூ.34.53 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினையும், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி திட்டத்தின்கீழ் ரூ.26.68 இலட்சம் மதிப்பில் பாக்கியா நகர் பகுதியில் நடைபெற்று வரும் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினையும் மாவட்ட ஆட்சீயர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, செயற்பொறியாளர் திருமதி.சுஜாதா, உதவி செயற்பொறியாளர் திரு.கிருஷ்ணபிரகாஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஸ்ரீதரன், ஜெய்சங்கர், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் திரு.மாயன்(எ) மாதன், கக்குச்சி ஊராட்சி தலைவர் திரு.ராஜமூர்த்தி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு; செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.